விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 25 துல் ஹஃதா: பிறை: 14 இதழ்: 116
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 08-06-1990

## க. பொ. த. (உயர்தர) பரீட்சை
## மாணவர் பெற்ற புள்ளிகள் இவ்வாரம் வெளிவரும்

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் இடம் பெற்ற கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பிரிவு பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள் பற்றிய விபரங்கள் இன்னும் ஓரிரு தினங்களில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் திரு. ஆதர் வெதாமுல்ல தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## கடற்றொழிலாளர்களை எல்லை கடக்கவேண்டாமென கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவர்களை எல்லைகடந்து செல்ல வேண்டாமென தமிழக முதல்வர்

(8ம் பக்கம் பார்க்க)

# ★ வவுனியா தாண்டிக்குளத்தில்
# புலிகள் - இராணுவம் மோதல்
# படையினர் தரப்பில் ஒருவர்பலி, 10பேர்காயம்
## 13 மாத காலத்தின் பின் யுத்தநிறுத்த மீறல்
## சென்றியை அத்துமீறிகடந்ததால்ஏற்பட்டசம்பவம்

(அலுவலக நிருபர் மணிசேகரன்)

கடந்த பதின்மூன்று மாதகாலத்திற்கு பின்னர் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்குமிடையே நேற்றுக்காலை வவுனியா-தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற நேரடிமோதலில் இராணுவத்தினரில் ஒருவர் இறந்துள்ளதுடன், பத்துப் பேர் படுகாயமடைந்தனர். இதில் ஐவர் ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: நேற்றுக்காலை 8-30 மணியளவில் வவுனியா இராணுவ முகாமிலிருந்து மூன்றுட்ரக்குகள், மூன்று கனரக வாகனங்கள், இரு 'பவலோ' டாங்கிகள் சகிதம் நூற்றுக்கு அதிகமான சிங்கள இராணுவத்தினர் முல்லைத்தீவு நோக்கிச்செல்லும்வழியில் தாண்டிக்குளத்திலுள்ள விடுதலைப்புலிகளின் அனுமதிபெறுமல் காவலரண்களைத் தாண்டிச் செல்லமுற்படுகையில் தொடர்ந்து செல்லவேண்டாமென புலிகள் தடுத்தனர்.

இதனைப் பொருட்படுத்தா

(8-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ரஞ்சன் பத்திரிகை வெளியிடுகிறார்

(கொழும்பு)

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன பத்திரிகை ஒன்றினை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்துள்ளார்.

வாராந்தர அமைச்சரவைக் கூட்டத்தையடுத்து நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

நல்ல நோக்கத்திற்காகவே இந்தப் பத்திரிகை ஆரம்பிக்கப்படவிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

எத்தனை நாட்களுக்கொரு தடவை இந்தப் பத்திரிகை வெளிவரும் என்று கேட்டபோது என்னிடம் செய்திகள் இருக்கும்போதெல்லாம் இந்

(8-ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று ஏற்பட்ட பதற்றம்

(வவுனியா)

வவுனியாவில் நேற்றுக் காலை சுமார் ஒன்பது மணியளவில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக, வவுனியா நகர்ப்பகுதியில் பதற்றம் காணப்பட்டது.

வவுனியாவிலிருந்து புறப்பட்டுச் சென்ற இராணுவத்தினர் சோதனையின் நிமித்தம் இடைமறிக்கப்பட்டபோது

(8ம் பக்கம் பார்க்க)

## உணவுமுத்திரைகளை ஒப்படைத்தால் வீடமைப்புக்கடனுக்கு முன்னுரிமை

(சித்தன்கேணி)

பதினைந்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் வீடமைப்புக் கடன்பெற விரும்புகின்ற குடும்பங்களுக்கு உணவு முத்திரைகளை திரும்பி ஒப்படைக்கும் பட்சத்தில் வீடமைப்புக்கடன் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின்தலைவர் அனுப்பியிருக்கும் சுற்றுநிருபம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சுற்று நிருபம் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (137)

## காங்கேசன்-கொழும்பு ரயிலில் தரக்குறைவான உணவு விற்பனை செய்யப்படுவதாக புகார்!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - கொழும்பு ரயிலில் உள்ள உணவு சிற்றுண்டிச்சாலையில் தரம் குறைந்த உணவு வகைகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பிரயாணிகள் பலர் புகார் செய்துள்ளனர்.

காலையிலும், மாலையிலும் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்

(8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு தேர்தலை கண்காணிக்க சர்வதேச பார்வையாளர் குழு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண சபை தேர்தலைக் கண்காணிப்பதற்கு சர்வதேச பார்வையாளர் குழு ஒன்றை அரசாங்கம் அழைக்கவிருக்கிறது.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன மேற்படி தகவலைத் தெரிவித்துள்ளார்.

## சிகிரியா ஹோட்டல் கொள்ளை: 6 கொள்ளையரின் சடலங்கள் அடர்ந்தகாட்டில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சிகிரியா ஹோட்டல் கொள்ளையில் சம்பந்தப்பட்ட ஆறு பேரின் சடலங்கள் வடமத்திய மாகாணத்தில் அடர்ந்தகாட்டுப் பகுதியிலிருந்து பொலிசாரினால் கண்டெடுக்கப்பட்டன.

கொள்ளையர்களைக் கண்டுபிடிப்பதற்காக மேற்படி காட்டுப் பகுதியைப் பாதுகாப்புப் படையினர் சுற்றிவளைத்தபோது அதற்குள் அகப்பட்டுக் கொண்ட கொள்ளையர்கள் உணவு கிடைக்காமல் பட்டினியால் இறந்திருக்கலாம் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சிகிரியா ஹோட்டலில்

(8-ம் பக்கம் பார்க்க)

## கிராம அபி. சங்கங்கள் புனரமைப்பு இடைநிறுத்தம்

(பண்டத்தரிப்பு)

கிராம அபிவிருத்திச்சங்கங்களின் புதிய யாப்புவிதிகள் வெளிவரும் வரை தற்போதுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களை புனரமைப்புச் செய்வதை இடைநிறுத்தி வைக்குமாறும், புதிதாக கிராம அபிலிருத்திச்சங்கங்கள் உருவாக்கப்படுவதை நிறுத்தி வைக்குமாறும் கொழும்பிலுள்ள கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் அறிவித்துள்ளார்.

இந்த சுற்றறிக்கை யாழ். அரசாங்க செயலகத்திற்குக் கிடைத்துள்ளதாகவும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளினது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் இப் புதிய சுற்றறிக்கைபற்றி தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (72)

## சரியும் நிலையில் மின்கம்பங்கள்

(யசழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையினுல் பராமரிக்கப்படும் நாயன்மார்கட்டு பாரதி வீதியலுள்ள இரண்டு மின்கம்பங்கள் உடைந்த நிலையிலிருப்பதுடன் அவை எந்த நேரத்திலும் விழக்கூடியநிலையில இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இதன் காரணமாக மேற்படி வீதியால் செல்லும் மக்கள் பீதியுடன் செல்லவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது (140)

## சிறு விளம்பரம்

### தேவை

வளர்ச்சியடைந்த கோழிகள் இறைச்சிக்குத் தேவை. கிலோ ரூபா 60/- ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி 3952)

வெட்டவும், தைக்கவும் தெரிந்தபெண் தையலாளர்கள் தேவை. விண்ணப்பிக்கவேண்டிய முகவரி விளம்பர இல. C 3956, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 3956)

### புலமைப் பரிசில் பரீட்சை - 1990

ஆண்டு 5 இற்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை ஒவ்வொரு சனியும் பி. ப. 3-00 - 6-00 வரை நடைபெறுகின்றது. எதிர்வரும் 9-6-90இல் 3 ஆம் தொடர் நடைபெறும். வெளி மாணவரும் தோற்றலாம். உடன் பதிவுசெய்யவும். எலேற் இன்ஸ்ரிரியூட் 99, மானிப்பாய் வீதி, வண்ணார் பண்ணை தபால் நிலையம் முன்பாக யாழ்ப்பாணம். (சி-3950)

### புலமைப் பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

கடந்த வருடம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த எமது நிறுவனத்தால் நடாத்தப்படும் புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (ஆறுவது) 07- 06- 90 வியாழக்கிழமை மு. ப 8-00 / 10-30, பி. ப. 1-00 / 3-30 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். எமது நிலயத்தால் வெளியிடப்பட்ட மாதிரி வினாவிடை (8 பயிற்சிகள்) விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 25-00. புதிய கல்வி நிலயம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, யாழ்ப்பாணம். (சி.3929)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# வலி. தெற்கு சனசமூகநிலையங்களின் சமாஜத் தலைவராக பத்திரிகையாளர் நியமனம்

[யாழ்ப்பாணம்]

வலி. தெற்கு சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவராக சமூகசேவையாளரும், விளையாட்டு வீரரும், பத்திரிகையாளருமான கவிஞர் க.பொ. நடனசிகாமணி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்க இயக்குநராகவும், தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஏழாலைப் பிரதேச அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் துணைத்தலைவராகவும், சுன்னாகம் றேயல் விளையாட்டுக்கழகத்தின் அமைப்புக்குழுச் செயலாளராகவும், குப்பிளான் கி. அ சங்கத்தலைவராகவும், சனசமூக நிலயத் துணைத்தலைவராகவும், பணியாற்றிவரும் இவர், அவ்வூர் சிற்றூர் அவையின் செயலாளருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# "மாணவர்கள் மத்தியில் புரட்சிகரமான கருத்துக்களை முன்வைத்தவர் முரளி"

**- பாப்பா**

(நாவற்குழி)

''மாணவர் சமுதாயத்தில் எமது தேசவிடுதலைப்போராட்டம்பற்றிய புரட்சிகரமான கருத்துக்களை முன்வைத்து மாணவர் சமுதாயம் எமது பேரராட்டத்தை புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக பல தியாகங்களைச் செய்தவர் மேஜர் முரளியாகும்''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியல்பொறுப்பாளர் திரு. பாப்பா சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற மேஜர் முரளி வெற்றிக்கேடயத்திற்கான புதிர்ப்போட்டியில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. பாப்பா தொடர்ந்து பேசுகையில், ''எமக்கு அரசியல் இராணுவ ரீதியான முட்டுக்கட்டைகள் ஏற்பட்டு எந்த உரிமையும் இல்லாத நடைப்பிணமாக ஒரு அமைதியைச் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம் அந்த அமைதியை வைத்து எதிர்காலத்தை நோக்கும்போது தமிழ் பேசும் மக்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது இதனை மாணவர்களாகிய நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேஜர் முரளி 76-ம் ஆண்டு கல்வி பயிலுவதற்காக ஜேர்மன் சென்று பின்னர் 80-ம் ஆண்டு லண்டன் சென்று எமது இயக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டார். அங்கு அவர் மாணவராக இருந்த காலகட்டத்தில் எமது விடுதலைப் புலிகளின் கொள்கையை உலகிற்கு பிர

(7-ம் பக்கம் பார்க்க)

# மன்னார் செய்திகள்

## குடிநீர்

தண்ணீர் இன்றி பாதிக்கப்பட்டுவந்த வங்காலை கிராமத்துக்கு தேவையான நீர் முருங்கனிலிருந்து குழாய் மூலம் வழங்கப்படுகின்றது. இது முழுப் பொதுமக்களின் தேவைக்காகப் பூர்த்தி செய்யப்படுகின்றது.

## அமைப்பு வேலைகள்

மன்னார் மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் வட்ட அவைகள் அமைப்பு வேலைகள் இன்று 8ம் தேதியும் 9-ம் 10-ம் தேதிகளிலும் நடைபெற உள்ளன.

அனைத்து சிற்றூர் அவைகளும் தங்களுடைய உறுப்பினர்களை வட்ட அவைக்கு அனுப்புவதற்கு ஆயத்த வேலைகளை செய்யுமாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் கேட்டுள்ளனர்.

வட்ட அமைப்பு அவையைத் தொடர்ந்து மாவட்ட அவைகளை அமைப்பதற்கான வேலைக்கும் நடைபெறும் எனவும் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் தெரிவித்தனர்.

## நிதர்சனம் ஒளிபரப்பு

மன்னார் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினரின் நிதர்சனம் தொலைக்காட்சி ஒளிபரப்பில் விடுதலை சம்பந்தமான நிகழ்ச்சிகளையும் பாடல்களையும் ஒளிபரப்புவதற்கு தந்து உதவுமாறு கலைஞர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

அத்துடன் வியாபார விளம்பரங்கள், அறிவித்தல்கள் சம்பந்தமான விளம்பரங்கள் செய்ய விரும்புவோர் மன்னார் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி நிதர்சனம் பிரிவோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள். (85)

# வெளியீட்டு விழா

(நாவற்குழி)

தமிழ்த்தாய் பதிப்பகத்தின் முதல் பதிப்பான புதுவை அன்பனால் எழுதப்பட்ட ''ஒரு வேள்வி நடக்கிறது'' என்ற நூல் வெளியீட்டு விழா இம்மாதம் புத்தூரில் நடைபெற இருக்கிறது. (107)

# நாளை சம்பந்தர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மணிமண்டபத்தில் திருஞான சம்பந்தரின் குருபூசை இளைஞர் இந்துமாமன்றத்தினரால் நாளை சிறப்பாகக் கொண்டாடப்படும். நாளை மாலை நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'சிவஜோதி' என்னும் பொருள்பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார்.

# உணவு முத்திரைக்கு பொருட்கள்

(மருதங்கேணி)

மாணவர்களின்மதிய உணவு முத்திரைகளுக்குகுறிக்க பட்ட பொருட்களை மட்டுமே கூட்டுறவுக் கடைகளில் கொள்வனவு செயயமுடியும்.

கல்வி அமைச்சு மாணவர்களின் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்படவிருக்கும் முறைகள் சம்மந்தமாக பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுற்று நிருபத்தில் கூறப்பட்டிருப்பதாவது. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்களையும் பாடசாலை பொருட்களையும் மாத்திரமே மாணவர்களின் மதிய உணவு முத்திரைகளுக்கு கூட்டுறவுக் கடைகளில் கொள்வனவு செய்யமுடியும்.

இப்பொருட்களை முத்திரை வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒருமாத காலம் வரையும் கூட்டுறவுக்கடைகளில் கொள்வனவு செய்யமுடியும். (53)

# இன்று

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 8 ம் திகதி ஆரம்பமாகின்றது. இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இவ் விழா தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 20ம் திகதி சப்பரத் திருவிழாவும் 21-ந் திகதி ரதோற்சவமும், 22-ந் திகதி தீர்த்த உற்சவமும் மறுநாள் 23-ந் திகதி திருக் கல்யாணமும் இடம்பெறவுள்ளன. (71)

0 0

தொல்புரம் அருள்மிகு ஆதி முத்துமாரி அம்மனின் வருடாந்த மகோற்சவம் கடந்த 30-ந் திகதி ஆரம்பமாகியது. தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ் விழாவின் இறுதி நாளான இன்று 8-ந் திகதி தீர்த்த உற்சவம் இடம்பெறும். நாளை மாலை 6-மணியளவில் அம்மனின் கிராம ஊர்வலம் நடைபெறும். (71)

0 0

(மட்டுவில்)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேஸ்தான பிரதம சிவாச்சார்யர் அவர்களுக்கு இன்று பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. (82)

# சட்டவிரோத மின்சாரம் துண்டிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப்பகுதியில் சட்டவிரோதமின்பாவனை வேலணை இலங்கை மின்சாரசபை ஊழியர்களினால் துண்டிக்கப்பட்டு வருகிறது.

புங்குடுதீவுக்கு திடீர்விஜயம் மேற்கொண்ட மேற்படி ஊழியர்களினால் பல சட்டவிரோத மின்வயர்கள் துண்டிக்கப்பட்டன. (101)


**TELLIPPALAI M.P.C.S.Ltd**

For G.C.E. (O/L)(A/L) Students,

**I. A. B. - Dec. 1990 Examination**

(International Association of Book-Keepers LONDON)

Preliminary - Rs. 400/-

Intermediate - Rs. 450/-

**Classes:** Saturday 3.30 p. m.

Sunday 3.30 p. m.

General Manager.

M. P. C. S., TELLIPALAI.

(சி 3953)

**உடனடிப் பிரயாணம்**

**MARAGATHAM TRAVELS**

வெளிநாட்டு கொம்பனியில் வேலை செய்ய தொழிலாளர் (LABOURERS) 10 பேர் உடன் தேவை.

சம்பளம்: ரூபா 4000/- + O. T.

உணவு, தங்குமிட வசதி இலவசம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**B.N.F.Travels & Tours,**
F/58, People Park,
Gaswork St.,
COLOMBO - 11.
Regd. No: 218764.
T'phone: 435906.

**'LAKSHMI',**
65 A, 4-th Cross St.,
JAFFNA.

(சி-3954)


# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**பிரம்மஸ்ரீ ப. சுப்ரமண்ய ஐயர்**

**[P. S. ஐயர்]**

(இளைப்பாறிய புகையிரத காணி உத்தியோகத்தர்,
நில அளவையாளர்,
யாழ். சிவானந்த குருகுல நிர்வாகஸ்தர்)

**தோற்றம்: 31-8-1922 மறைவு: 8-6-1988**

நல்லவராய், வல்லவராய், இனியவராய், ஆசானாய் எம்மை வாழ வைத்து விண்ணகம் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் பல கடந்தாலும், எமது உள்ளங்களில் உங்கள் நினைவு என்றும் உறைந்திருக்கும்.

65, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3955)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# ஜம்மு காஷ்மீரில் இந். ராணுவம் சித்திரவதை செய்வதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் பலத்த கண்டனம்

## தடயங்களுடன் செய்திகள் பிரசுரம்

[லண்டன்]

**ஜம்மு - காஷ்மீரில் அண்மைக் காலங்களில் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் கடும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளதுடன், இந்திய இராணுவத்தின் இச்செயலை வன்மையாகக் கண்டித்துள்ளன. சித்திரவதை செய்ததற்கான ஆதாரங்களையும் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.**

ஜம்மு - காஷ்மீரின் சுதந்திரம் கோரி போராடி வரும் ஜம்மு-காஷ்மீர் விடுதலை இயக்கத்தின் கடும் தாக்குதல்களை அடுத்தே நூற்றுக்கணக்கானவர்கள் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். இவர்களில் விடுதலையான பலர் சொல்லொணு சித்திரவதைகளை அனுபவித்துள்ளதாகவும் இவர்களின் உடம்பு முழுவதும் கடும் சித்திரவதை செய்யப்பட்டதற்கான பல அடையாளங்களும், பலத்த காயங்களும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செய்திகளை நேற்று முன்தினம் பிரிட்டனில் வெளியான 'த பினன்ஸியல் ரைம்ஸ்', 'த கார்டியன்', 'ரைம்ஸ்' மற்றும் சில பத்திரிகைகள் தலைப்புச் செய்திகளாக வெளியிட்டுள்ளன. அவை மேலும் தெரிவிக்கையில்;

தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் கைதானவர்கள் மீது பலத்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பலருக்கு உள்காயங்கள்ஏற்பட்டுள்ளதுடன் இதய சுவாச பாதிப்பிற்குமுள்ளாகியுள்ளனர். பலர் கைகள், கால்கள் கட்டப்பட்டு தாக்கப்பட்டும் நெருப்புச் சூட்டுக் காயங்களும், பிரம்படி தழும்புக் காயங்களுக்குமுள்ளாகியுள்ளனர்.

மேலும் பலர் விடுதலை செய்யப்படாது சிறைகளில் கடும் சித்திரவதைக்குட் படுத்தப்பட்டுவருவதாகவும் முகாம்களில் இவர்களின் குழறல் சத்தங்களையும்முனகல்சத்தங்களையும்தொடர்ந்தும் தாம்கேட்டதாக விடுதலையான பலர் தெரிவித்ததாகவும் இப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

மேலும் ஜம்மு - காஷ்மீரின் சில பகுதிகளில் இந்திய இராணுவம் பெண்கள் மீது பலாத்கார நடவடிக்கைகளையும்மேற்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செயல்களிற்கு பத்திரிகைகள் பலத்த கண்டனங்களையும் தெரிவித்துள்ளன.

### ஆளுநர் உத்தரவு

இதேவேளை ஜம்மு-காஷ்மீரில் வீடு வீடான சோதனை நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு மாநில ஆளுநர் இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'ஆத்மஜோதி' திரு முத்தையாவின்பாதயாத்திரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

செட்டிக்குளம் பகுதியில் பாதயாத்திரையை முடித்த பின்னர் அவருக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக பின்போடப்பட்டுள்ளது என்றும் இப்பாதயாத்திரை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் கிராமங்கள்தோறும் இன்று ஆரம்பமாகவிருந்ததாகவும் இன்நிகழ்ச்சி திட்டமிட்டபடி பிறிதொரு தினத்தில் நடைபெறுமென்றும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. அ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

# சோவியத்தில் கலவரம்! தாக்குதலில் 40 பேர் பலி!

(மாஸ்கோ)

சோவியத் யூனியனில் 'ஹோர்கிஸியா' மாநிலத்தில் இடம்பெற்றுவரும் கலவரங்களில் சுமார் 40 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். தற்போது மாநிலம் முழுவதும் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் ஊரடங்கு உத்தரவையும் மீறி பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பல இடங்களிலும் ஊர்வலங்களை கலைக்க துப்பாக்கி, கண்ணீர் புகை குண்டு பிரயோகங்களும் செய்யப்பட்டு வருகிறது.

கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டங்கள் பெருமளவில் இடம்பெற்று வருகிறது. பல பிரமுகர்களின் வீடுகள் கல்லெறிகளுக்குள்ளாகி சேதமடைந்துள்ளன. தலைவர்களை கண்டித்தும் மாநிலமெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

சோவியத் குடியரசுகள் சுதந்திர நாடுகளாக பிரிந்து செல்ல அனுமதிக்க வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டகாரர்கள் கோஷமிட்டு வருகிறார்கள். நிலைமைகளை சமாளிக்கும் விதத்தில் மாநிலமெங்கும் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. (சி)

## திறந்தபல்கலைக்கழகம் பொறியியல்பீட மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட மாணவர் சங்கத் தேர்தலில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: ரி. ராஜன் செயலாளர் எஸ். கிருபாகரன் பொருளாளர் வி. கலையரசன்

இத்தேர்தல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையங்களில் ஜுன் மாதம் முதலாம் திகதி முதல் ஜுன் 5-ம் திகதி வரை நடைபெற்று யாழ். பிராந்திய நிலைய திறந்த பல்கலைக்கழக தேர்தல் முடிவுகள் பிரதிப் பணிப்பாளர் திரு. கே. கருணுகரனுல் வெளியிடப்பட்டன.

# லைபிரியாவில் கடும்சண்டை; கெரில்லாக்கள் கைஓங்குகிறது

## விமானத்தளம் கைப்பற்றப்பட்டது

(வாஷிங்டன்)

லைபீரியாவில் அண்மை காலமாக இடம்பெற்று வரும் உள்நாட்டு யுத்தம் தற்போது உச்சக்கட்ட நிலையை அடைந்துள்ளது, லைபீரியாவின் வடபுறத்திலுள்ள முக்கிய விமான தளமொன்றை கெரில்லாக்கள் கைப்பற்றியுள்ளனர்.

அரசுக்கு எதிராக கிளர்ச்சிகளை மேற்கொண்டு வரும் இடதுசாரிக் கெரில்லாக்கள் அண்மைக்காலமாக கடும்யுத்தத்தில் ஈடுபட்டு பல முக்கிய கேந்திரங்களை கைப்பற்றியுள்ளன. பல சந்தர்ப்பங்களில் அரசு படைகள் பின்வாங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று தினங்களின் பின் கடும் யுத்தத்திலீடுபட்டு அரசு படை வசமிருந்த விமான நிலயத்தை கெரில்லாக்கள் கைப்பற்றியுள்ளனர். மேலும் ஒரு துறை முகத்தை கைப்பற்றும் முயற்சியில் கடும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை அங்குள்ள வெளிநாட்டவர்களை உடன் வெளியேறுமாறு சம்பந்தப்பட்ட நாடுகள் தனது பிரஜைகளுக்கு உத்தரவிட்டுள்ளது. பெருமளவு அமெரிக்கர்கள் அங்கிருந்து நாடு திரும்பியுள்ளனர். (சி)

## பிரிட்டிஷ் பிரதமர் தட்சர் சோவியத் விஜயம்

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சர் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு நேற்று சோவியத் யூனியன் சென்றுள்ளார்.

சோவியத்தில் தங்கியிருக்கும் காலத்தில் அதிபர் கொர்பச்சேவுடன் இரு தரப்பு முக்கிய உறவுகள் குறித்தும், ஆயுதக் கட்டுப்பாடுகள் பற்றியும், இரு தரப்பு வர்த்தக நிலைகள் குறித்தும் திருமதி தட்சர் பேச்சுக்கள் நடாத்துவார்.

பிரிட்டனில் அதிபர் திருமதி தட்சரின் செல்வாக்கு பெருமளவு மங்கிவரும் வேளையில் சோவியத் விஜயத்தின்போது மேற்கொள்ளப்படும் பலமுடிவுகளைப் பொறுத்தே இவரது செல்வாக்கின் எதிர்கால நிலை அமையுமென அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இருதரப்பு வர்த்தகஉறவில் சில முட்டுக்கட்டைகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இன்று

[வட்டுக்கோட்டை]

சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோவில் தீர்த்தத் திருவிழா இன்று நடைபெறுகிறது. (139)

# தமிழ் மருந்துக் கடைகள் பூட்டப்படுவதினுல் மக்கள் பாதிப்பு!

[மானிப்பாய்]

யாழ் நகரில் சாய்ப்புச்சட்டத்தின் கீழ் தமிழ் மருந்துக் கடைகளும் பூட்டப்படுவதனுல் மக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசிய சேவைகளிலொன்ருகக் கருதப்படும் இம் மருந்துக்கடைகள் சனி அரை நாளும் ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களிலும் மூடப்படுவதனுல் நோயாளிகளுக்குரிய மருந்துச் சரக்கு வகைகளைப் பெறமுடியாமலும், கோவிலுக்குரிய அபிஷேகத் திரவியங்கள், மரண வீட்டுக்குரிய சாமான்கள் முதலியனவற்றை பெறமுடியாமலும் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே சாய்ப்புச் சட்ட நடைமுறையிலிருந்து இம் மருந்துக்கடைகளுக்கு விதிவிலக்களிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் கேட்கின்றனர். (71)

# சிலியில் புதை குழியிலிருந்து பல சடலங்கள் மீட்பு

## அரசுக்கு எதிராக குற்றச்சாட்டு

(சந்தியாகோ)

சிலியில் பெரும் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப் புதைகுழியிலிருந்து சூட்டுக்காயங்களுடன் பல சடலங்களை சர்வதேச மன்னிப்பு சபை உறுப்பினர்கள் மீட்டுள்ளனர்.

கிராமப் பகுதியொன்றில் இச்சடலங்கள் பழுதடையாத நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கண்கள் கட்டப்பட்டு கைகள் பின்னுல் கட்டப்பட்ட நிலையில் இருதயப் பகுதியில் குண்டு துளைக்கப்பட்ட 18 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த சில வருடங்களுக்கு முன் இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாமெனவும் இவர்கள் அரச படைகளாலேயே கொல்லப்பட்டதாகவும் மன்னிப்பு சபை உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

1973ல் சிலியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றிய ஜெனரல் ஒகஸ்ரோ பினுேசீற்றின் ஆட்சியில் பல்லாயிரக்கணக்கானுேர் கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானுேர் சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டுமுள்ளதாக மன்னிப்பு சபை குற்றம்சாட்டி வருவதும் தெரிந்ததே. (சி)

# சிற்றூர் அவை செயற்பாடு: வலி வடக்கில் கருத்தரங்கு

(காங்கேசன்துறை)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சிற்றூர் அவை செயற்பாடுகள் குறித்து வலி. வடக்கில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராம சேவகர் பிரிவுகள் தோறும் சிற்றூர் அவைகளைத் தெரிவு செய்யும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இவற்றை செயற்பட வைப்பதற்காக கருத்தரங்குகள் மூலம் பொது மக்களுக்கும் சிற்றூர் அவைப்

(5ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

புனித ஞானம் பகுத்தறிவால் உண்டாவதில்லை. அது நல்லாசிரியன் அருளால் கிடைப்பது.

— மகாத்மாகாந்தி

## நமது நோக்கு

# தீராதா காய்ச்சல் திருமலையில்...?

திருமலை எப்போதும் அரசியற் 'காய்ச்சல்' உள்ள இடமாகத்தான் இருந்து வந்துள்ளது.

திட்டமிட்ட குடியேற்றங்களால் இனவிகிதாசாரம் மாற்றியமைக்கப்பட்ட காரணத்தால் அங்கு பதட்டமும் நெருக்கடி நிலையும் அடிக்கடி ஏற்பட்டதில் வியப்பில்லை.

ஆனால், இன்று இங்கு நாம் குறிப்பிடுவது அங்கு வேகமாகப் பரவிவரும் நெருப்புக்காய்ச்சல் பற்றியதே.

அண்மையில் கிடைத்த ஓர் அறிக்கையின்படி, திருமலை மாவட்டத்தில் 569 மக்களுக்கு நெருப்புக் காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

இதில் 328 மக்கள் திருமலை நகரில் உள்ளார்கள். ஏனையோர், நிலாவெளி, தம்பலகாமம், கிண்ணியா, புல்மோட்டை, கந்தளாய், மூதூர், கிளிவெட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள்.

சென்ற ஐந்து ஆண்டுகளில் நெருப்புப்புக்காய்ச்சலாற் பீடிக்கப்பட்டோர் தொகை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளதை வைத்திய அதிகாரிகளின் புள்ளிவிபரங்கள் புலப்படுத்துகின்றன.

இதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் அப்பகுதி மக்கள் வேதனை மேலும் அதிகரிக்கலாம்.

குறிப்பிட்ட சில சுகாதாரப் பணிகள் உடனுக்குடன் செய்யாத காரணத்தால், நோய் பரவுவதற்கான சூழ்நிலை உருவாகிவிட்டது.

தெருவோரக் கழிவு வாய்க்கால்கள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டவை; நீண்டகாலமாகத் திருத்தப்படாதவை. இதனால் கழிவுநீர் தேங்கி நிற்கும் வாய்ப்பு ஏற்பட்டதால் நுளம்பு, ஈ ஆகியவற்றின் உற்பத்திக்கு நல்ல களமாக அமைந்துவிட்டன.

சுகாதாரச் சீர்கேடுகளை இனம்கண்டு உடன் ஆவன செய்வதற்காக அதிகாரிகள் மட்டத்திலான கூட்டம் நடைபெற்றதாகச் செய்திகள் கூறுகின்றன.

இந்தக் கழிவுநீர்க் கால்வாய்களின் திருத்தம் அல்லது மாற்றம் பற்றிய ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. நோய்கள் பரவி மக்களுக்குச் சுகாதாரக் கேடுகள் விளைவிக்கும் நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவேண்டும்.

இன்றும் கூட, திருமலையில் வாளி மலகூடமுறை பூரணமாக முடிவுக்குக் கொண்டுவரப்படாத அவலம் தொடருகின்றது. படிப்படியாக நீரடைப்பு மலகூடங்கள் அமைக்கப்படுவது மிக மிக அவசியம்.

குழாய்நீர் விநியோகம் மக்களின் தேவையைப் பூர்த்திசெய்வதற்குப் போதாது, இக் குறையைப் போக்குவதற்கு கூடியளவு நீர் வழங்குவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது.

சுத்தமான குடிநீர் இன்மையால் நோய்கள் பரவும் அபாயம் அதிகரித்துச் செல்லும். மக்கள் கொதித்து ஆறிய நீரைப் பருகுவதன் மூலம் நோய்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

உணவுச்சாலைகளில் வழங்கப்படும் உணவுகள் சுகாதார முறைகளுக்கேற்பத் தயாரித்து வழங்கப்படுகின்றனவா? காலநிலையைச் சாட்டாக வைத்து, அனுமதிகள் பெறுமலே பல உணவுச்சாலைகள் இயங்குவதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளன. சுகாதார அதிகாரிகளின் சிபார்சுகளில்லாமல், எவ்வித அனுமதியும் வழங்கக் கூடாது.

நகரப்புறங்களில் குப்பை கூளங்கள் ஒழுங்காக அகற்றப்படுகின்றனவா? இதற்கான ஒழுங்குகள் தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டாமோ?

நோய்கள் பரவாது தடுக்க அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதேவேளை, மக்களிடம் உடல்நலம் பேணும் அறிவைப் பாடசாலைகள் மூலமும், சுவரொட்டிகள் மூலமும் பரப்புதலும் அவசியமாகின்றது.

## கருணை தாராய்!

கலைக்காற்று வீசதுயில் கொள்பாஷை யூரின்
அலைக்காற்று நீராட்டும் அன்பே! — தலைக்கேற்றும்
பொன்கவியால் வாழ்த்திப் புகழ்ந்தேன் புனிதனே!
இன்றுன் கருணையெனக் கீவாய்.

— பாஷையூர் மு. சிங்கராயர்

(இன்று பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தின் ஐந்தாம் நாள் திருவிழா)

# பிரதோஷம் - ஒரு விரிவான விளக்கம்

சுக்கிலபக்ஷம், கிருஷ்ண பக்ஷம் என்னும் இரண்டு பக்ஷத்திலும் வருகின்ற திரயோதசிதிதியில் சூரியாஸ்தமனத்துக்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும் பின் உள்ள காலமே (மாலை 4 30 முதல் 6 மணிவரை) பிரதோஷகாலமெனப்படும்.

### பிரதோஷ மகிமை

சிவபெருமான் பிரதோஷ காலத்தில் இடபதேவரின் இரு கொம்புகளுக்கிடையே உயிர்கள் உய்வும் பொருட்டு திருகயிலையில் திருநடனம் புரிந்தார். அப்போது அம்பிகை, தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள் யக்ஷர்கள், கின்னர்கள் திக்கு பாலர்கள் இறைவனை வழிபடுகிறார்கள். ஆகையால் பிரதோஷ காலத்தில் கோயிலுக்குச் சென்று சிவனை தரிசிக்கும் போது சிவசன்னிதானத்தில் மற்ற இறையம்சங்களையும் ஒரே சமயத்தில் தரிசிக்கும் பலன் உண்டு என்கிறார் காஞ்சி ஸ்ரீ ஜேயேந்திர சரஸ்வதி சுவாமிகள். இதுதான் பிரதோஷத்தின் தனிச்சிறப்பு இக்காலத்தில் சிவபிரான் இருநிலைகளில் காட்சியளிக்கிறார். அர்த்தநாரீசுவராக, உமா மகேசுவராக.

### பிரதோஷ பூஜா பலன்

சிவமூர்த்திக்குரிய பல விரதங்களில் இது தலையாயது இந்த விரதத்தை அனுட்டிப்பவர்கள் துன்பங்களிலிருந்து இன்பத்தை எய்துவர் என்பது வரலாறு.

சிவதரிசனமும், சிவநாம ஜபமும் பஞ்சாட்சரஜபமும் மிகவும் முக்கியமானவை. பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை வரும் மகாபிரதோஷ காலத்தில் ஜபித்தால் மிகுந்த பலன் உண்டு. மகா பிரதோஷ காலத்தில் அர்த்தநாரீசுவர வடிவத்தை தியானிப்பது மிக விசேடமாம். சிவம் என்றால் மங்களம், புனிதம், சிரேயஷ, கல்யாணம், சுபம் என்று பொருள்.

நான் அறிந்த ஒரு மூதாட்டி வயது 90 சென்ற அரை நூற்றாண்டு காலமாக இப்பிரதோஷ விரதத்தை அனுஷ்டித்து அதன் பலன்களை அநுபவித்து வருகிறார்.

செ. இரத்தினசபாபதி

### வாக்காளர் இடாப்பு வேலைகள்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராம சேவை அலுவலர் பிரிவிலும் கிராம சேவை அலுவலர்களினால் வாக்காளர் இடாப்பு தயாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (137)

# அத்தியாவசிய பொருள்கள் விலை ஏற்ற இறக்கம்

## மக்கள் கருத்து

தங்கள் நாளேட்டில் சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசியபொருள்களின் விலை ஏற்ற இறக்கத்தில் தமக்குச் சாதகமாக நடந்து கொண்டன என்ற விபரம் பிரசுரமாயிருந்தது. சில சங்கங்கள் என்று குறிப்பிட்டிருந்தபோதிலும் நாம் எமது பாவனையாளருக்குஎமது நிலையைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது.

சீனியின் விலை குறைக்கப்பட்டதாக பத்திரிகை மூலம் செய்திகிடைத்ததும் கூட்டுறவு மொத்த விற்பனைத்தாபனத்துடன் தொடர்பு கொண்டபோது பழுப்புச்சீனியின் விலையே குறைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வெள்ளைப் பச்சை அரிசியின் விலை குறைக்கப்பட்டமை பற்றி எமக்கு அறிவித்தல் கிடைக்கப்பட்டதும் உடன் நடவடிக்கைஎடுக்கப்படுகிறது.

மாவின் விலை ஏற்றம்பற்றிய அறிவித்தல் எமக்கு கிடைத்துள்ளது. எமது சங்கத்தைப் பொறுத்த வரையில் மாவின் விலை ஏற்றப்பட்டதும் நாம் நியாயமாகவேநடந்துள்ளோம் விலை ஏற்றத்தை அறிந்ததும் வழக்கத்திற்கு மாறாக மாவினைக் கொள்வனவு செய்ய வந்தவர்களுக்கு நாம் மா வழங்கவில்லை. பேக்கரி உரிமையாளர்களுக்கு வழமைபோல் வழங்கிய அளவு மாவினை நாம் விநியோகித்துள்ளோம். அதனால் பாணுக்கு இப்பிரதேசத்தில் தட்டுப்பாடிருக்கவில்லை. எமது சங்கக்கிளைகள் மூலமாக நுகர்வோருக்கு வேண்டிய மாவை விநியோகித்துள்ளோம். எமது கிளைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்து வியாபாரம் செய்வதனால் விலை கூட்டப்பட்டதற்கு முதல் நாளும் கிளைகளில் மா விநியோகம் நடைபெற்றுள்ளது. எமது சங்கப்பரப்பில் மாவிநியோகம் பற்றிய முறைப்பாடு எதுவும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வை. செந்தில்நாதன்
தலைவர்.
சங்கானை ப. நோ. கூட்டுறவுச் சங்கம்.

## சமயத்தை விளங்க வேண்டாமா?

(1) வேதம் என்ற சொல்லின் கருத்து என்ன?

வேதம் 'வித்' என்னும் வடமொழிச் சொல்லின் அடியிலிருந்து தோன்றியது. 'வித்' என்ற வடமொழிச் சொல்லுக்கு அறிதல் என்பது கருத்து. எனவே வேதங்கள் என்ற சொல்லுக்கு அறிவு நூல்கள் என்பது கருத்தாகும்.

(2) மாதோட்டம் என்ற பெயர்வரக் காரணம் யாது?

மகாதுவஷ்டாஎன்னும் தேவதச்சன் பாலாவி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சுயம்புலிங்கமாகிய திருக்கேதீச்சர நாதரை நியமமாகப் பல காலம் பூசித்துத் தவஞ்செய்து விசுவகன்மா என்ற புத்திரனையும், இட்டசித்திகளையும் பெற்றான். அன்றுமுதல் அந்நகரம் ''மகாதுவட்டாபுரம்'' எனப் பெற்றது என்று தட்சிணகைலாச மான்மியம் கூறுகின்றது. மகாதுவஷ்டாபுரம் ''மாதோட்டம்'' என்று மருவியது எனலாம். மேலும் ''மாதோட்டம்'' என்பதன் சுருங்கிய மொழிப் பெயராக ''மாந்தை'' என்ற பெயரும் இதற்கு உண்டு. இம் மாதோட்டப பிரதேசத்தில் விசுவகன் மாவாற் செய்யப்பட்ட காந்தக் கோட்டை அல்லது காந்தமலை என்னும் பெயருடைய இரும்பாலான கோட்டை ஒன்று இருந்தது என்பது பழைய நூல்களால் தெரியவருகிறது.

தொகுப்பு: சி. கலையரசி

## பலதும் பத்தும்

### வைத்தீஸ்வராவில்.....!

யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியில் ஓர் முத்தமிழ் விழா. உரையரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம், இசையரங்கு, நாடகம், நடனம்... இப்படிப் பல நிகழ்ச்சிகள்! 'இஸ்லாமியர் தந்த தமிழை' ஆசிரியர் அப்துல் ரஹீம் அழகுதமிழில்தொகுக்க' 'கிறிஸ்தவம் தந்த தமிழை' வண. நீ. மரியசேவியர் ஆய்வுநோக்கோடு தொகுக்க, சர்வமத சமரசம் தெளிவுற்றது; நல்ல இலட்சிய ஒழுங்கு!

கவியரங்கிற்கான கவிஞர்களை அதிபர் கவிதை பூ மாலையோடு ஒவ்வொருவராக அழைக்க, சிறுவர்கள் மாலையோடு வரவேற்று இருத்திய காட்சி... கவிஞர்களைக் கெளரவிக்க நல்ல உத்தி.

மணிவிழாக்கண்ட கையோடு கவியரங்கிற்குத் தலைமைதாங்க வந்திருக்கிறார் சொக்கன் – இலக்கிய மேடைகள் இனி..மேலும்.. கலகலப்படையும். கம்பனைச் சோ. பத்மநாதனும், வள்ளுவனைச் ச. வே. பஞ்சாட்சரமும், இளங்கோவைக்காரை செ. சுந்தரம்பிள்ளையும் பாரதியைப் பா. சத்தியசீலனும் கருப்பொருளாக்கிக் கவிதை பொழிந்தார்கள். அன்னியப்படையும், அயல் நாடொன்றின் முன்னை நாள் பிரதமரும் பஞ்சாட்சரத்தின் கவிதையில்... பட்டபாடு...!

இளங்கோ பாடிய காவேரி, 'காரை'யிடம் மகாவலியாகி... இப்பகுதிக்குத் தொல்லைதந்தவர்கள் கேட்டிருந்தால்... மகா-வலியாகியிருக்கும்.

பட்டிமன்றத்தில் — ''சீதனம் அவசியம்'' என மூன்று மாணுக்கர்கள் ஒட்டிப்பேச, அவசியமில்லை என மூன்று மாணவிகள்வெட்டிப் பேசினார்கள். உணர்ச்சிப் பிரவாகம் சபையிலே மாத்திரமாதெரிந்தது? பேசியோர் பலரிடமும் இருந்தது காரம், அதிகம் இருந்தது கருத்தாழம்?

கணீரென்ற குரலில் மாணவியரின் இசையரங்கு– சுவைத்தனர் அனைவரும் ''வெள்ளிப்பனிமலை...'' — பலர் சேர்ந்துபாட ஏற்ற பாடலா?

இந்த முத்தமிழ் விழாவின் சிற்பி யார்...? சிற்பிதான்..!எட்டாண்டுகளுக்கு மேல் 'கலைச்செல்வி' மூலம் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் உருவாக்கிய பழம் பெரும் எழுத்தாளரல்லவா? கதைகள், கவிதைகள், நாடகங்கள் மூலம் நீண்டகாலம் கலை, இலக்கியப்பணி புரிந்த அதிபரின் கைவண்ணம் இந்த முத்தமிழ் விழாவிலே பளிச்சிட்டிருக்கின்றது....!

எவ்வாறு? ஒரு உதாரணம்...தமிழ்விழாவல்லவா? ஆசிரியர்களும் மாணவர்களும் வேட்டியோடும், மாணவிகள் பண்பாடான ஆடைகளோடும் வந்திருந்தார்களே...!

வாணி

## முறைசாராக்கல்வி பயிற்சி:
# சான்றிதழைப் பெறும் நோக்கமாக இருக்கக்கூடாது

(மருதங்கேணி)

"முறைசாரக் கல்விப் பயிற்சியினைப் பெறுவது, சான்றிதழை மட்டும் பெறும் நோக்கமாக இருத்தல் கூடாது."

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தலிங்கம் தடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கேணி அரசினர் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் மோட்டார் படகு இயந்திரம் திருத்துதலுக்கான முறைசாரக் கல்விப் பயிற்சி நெறியினை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

மருதங்கேணி அரசினர் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் பொ. சங்கரப்பிள்ளை தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது; "ஒரு பிரதேசத்தில் காணப்படும் தொழில் வாய்ப்பு, மூலவளம் ஆகியன வற்றினை அடிப்படையாகக் கொண்டே, அப்பகுதிக்கு உரிய முறைசாராக் கல்வி நெறி தெரிவு செய்யப்படுகின்றது. வடமராட்சி கிழக்கில் கடற்றொழில் முக்கியத்துவம் பெறுவதினாலேயே, மோட்டார் படகு இயந்திரம் திருத்துதலுக்கான பயிற்சி நெறி அளிக்கப்படவுள்ளது" என்றார்.

இவ் வைபவத்தில் யாழ். மாவட்ட முறைசாராக் கல்விக்கான கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியமும் கலந்து கொண்டார்.

பயிற்சி நெறிக்கு 30 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். [53)

## 'நுண்கலைக்கழக இசைபீடம்
# யாழ். இசைவளர்ச்சிக்கு கிடைத்த வரப்பிரசாதம்'

### - பேராசிரியர் சிவத்தம்பி

(தென்மராட்சி)

"இராமநாதன் நுண்கலைக் கழகத்தின் இசைபீடம் யாழ்ப்பாணத்தின் இசை வளர்ச்சிக்குக் கிடைத்த வரப்பிரசாதம். அங்கு இசை பயின்ற கலைஞர்களால் அதன் புகழொளி பரவுகின்றது, இசை உலகில் இன்று அரங்கேற்றம் செய்யப் பெற்ற கலைமணி செல்வி புஸ்பராணி இசையில் தமக்கென ஒரு பாணியை உருவாக்கி பேரும் புகழும் பெறவேண்டும்."

இசைக்கலைமணி செல்வ புஷ்பராணி சின்னத்தம்பியின் இசை அரங்கேற்றத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு கூறினர்-

வரணி சுட்டிபுரம் கண்ணகி கலையரங்கில் வரணிக் கொத்தணி அதிபர் திரு. சி. துரைராசா தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்து பேசும்போது; 'கலைஞர்கள்' தாம் பயின்று அரங்கேறியதுடன் மட்டும் நின்றுவிடாது இசையில் புதிய ஆக்கங்களைக் கண்டுபிடித்து பாடல்களை மெருகேற்றிப் பாடவேண்டும். தாம் கற்ற உருப்படிகளை மேலும் மேலும் பாடும்போது அவற்றில் அவை மெருகேறி நயமாக விளங்குவதை காணமுடியும். இந்நெறி ரஸிகர்களையும் நன்கு கவரவைக்கும்.

இசைக்கச்சேரியால் மக்களிடம் ரசனை ஏற்படவேண்டும். ரசிப்பாற்றலும் ஒரு தனிக் கலை. சுட்டிபுரம் சுற்றுடல் ரசனை நிறைந்த இடம். சீர்காழி கோவிந்தராஜன் திருவாவடுதுறை ரி. என். இராசரத்தினம்பிள்ளை, பிரபல்யமான நாதஸ்வரவித்துவான்கள் அள்ளி இறைத்த இசை வெள்ளம் பாய்ந்த இடம். நானும் இக் கச்சேரிகளை ரஸிக்க இங்கு வரக் கொடுத்துவைத்துள்ளது. இவ்வகையான கிராமப்புறங்களில் ரசனையை ஏற்படுத்தும்போது கலையுணர்வு, பண்பாடு பக்தி முதலான கலாச்சாரப்பண்புகள் பரிணமிக்கும்" என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசிரிய சுவாமிகள் உட்படப் பலர் ஆசி வழங்கினர். (81)

## வீதி திருத்த நிதி ஒதுக்கீடு

(மருதங்கேணி)

கனடிய அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில்உள்ள உள்ளூராட்சி திணைக்கள வீதிகளைத் திருத்தியமைப்பதற்கு 200 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இந் நிதியினைக்கொண்டு செய்யப் படவிருக்கும் வீதி வேலைகளை எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடித்து விடும்படி யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவாகலால, பிரதேச சபைகளின் விசேட ஆணையாளருக்கு அறிவித்துள்ளார். (53)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 8ம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்களுக்கு உற்சவம் நடைபெற இருக்கிறது. (கி)

## அந்தோனியார் உற்சவம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 13ம் திகதி திருப்பலி பூசையுடன் உற்சவம் முடிவடையும், பூசைகளை பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு செபமாலைதுறம் அடிகளார் நிறைவேற்றுவார். [72]

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபைதிருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் குருபூசை குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் நாளை சனிக்கிழமை கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறும்.

ஏழாலை சைவசமய அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. சி. சக்திகிரீவன் சிறப்புரை ஆற்றுவார்.

## புகார் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை

(வடமராட்சி)

வடமராட்சியில் அதிபரால் தண்டனைபெற்று பாதிப்பிற்குள்ளான மாணவன் தொடர்பாக கொடுக்கப்பட்டமுறைப்பாட்டிற்கு வடமராட்சிகோட்டக்கல்வி அதிகாரி இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மாணவன் விமலதாசின் தாயார் திருமதி எஸ். சின்னராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி அதிபரினுல் தண்டிக்கப்பட்ட மாணவன் விடயமாக பெற்ருேர் கோட்டக் கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு கொடுத்ததாகவும், ஒருவாரத்திற்கு மேலாகியும் இதுவரை மேற்படி நிர்வாகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மாணவனின் தாயார் தெரிவித்தார்.

## இறுதிப் பரீட்சை

(ஒட்டுசுட்டான்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் சென்ற ஆண்டு நடைபெருது இருந்த இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 12ம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (144)

## ஒவ்வொரு பாடசாலையிலும் வாசிகசாலை அவசியம்

[தென்மராட்சி]

"கிராமப்புறப் பாடசாலையாயினும் ஒழுக்கம், ஒழுங்கு பண்பு, திறமை என்பன இங்குள்ள மாணவரிடம் மலருவதை நான் கவனித்தேன். இதிலிருந்து பிள்ளைகள்மூலம் பெற்ருேரும் பண்பு மிக்கவரென்பது தெளிவாகின்றது. கிராமமக்கள் நகர மக்களுக்கு குறைவானவரல்லர். கிராமம் நகரமாக மாறவேண்டுமானல் பிரதான அபிவிருத்திகளுடன் கிராம மக்களின்பண்பு, நல்லுறவு, ஒற்றுமை என்பனவும் பரஸ்பரம் விளங்கவேண்டும்"

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இவ்வாறு கூறினுர்.

வித்தியாலய அதிபர் திரு. கே. தம்பு தலைமையில் போட்டி நடைபெற்றது.

திரு. அன்ரன் அல்பிரட் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது: நான் பதவி ஏற்றதும் முதன்முறையாக கலந்துகொண்ட விளையாட்டுப்போட்டி இதுவாகும். இவ் விளையாட்டு மைதானமாக வயல் பாவிக்கப்படுவது எனக்கு மகிழ்ச்சியூட்டுகிறது. உடல் வளர்ச்சிக்கு வயலின் பயன் உதவுவதுபோல விளையாட்டு வளர்ச்சியையும் வயல் மூலம் பெறலாம் எனக் காட்டுகின்றது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் வாசிகசாலை அவசியம். அறிவு பெருகவைக்க வெளிப் புத்தகங்களை வாசிக்கவேண்டும். பரீட்சை சித்தியடைய ஆசிரியர் கற்பிப்பதுடன் மட்டும் நிற்காது வாழ்வு திறன் அடைய வாசிப்பும் வேண்டும்.

விளையாட்டினுல் உடல் வளர்ச்சியடையும். பழையகால வீரர்கள் விளையாட்டினுல் தான் பெருமையடைந்தனர். விளையாட்டுமூலம் மனிதன் மனிதனுக வளருகின்ருன்.

வரணி கொத்தணி அதிபர் திரு. சி. துரைராசா சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர். திருமதி ஜூலியற் அன்ரன் அல்பிரட் பரிசில் வழங்கினுர். (51)

## 'ஈழநாடு'

**வார மலர்**

**10- 06 - 1990**

- ★ தமிழ் இலக்கியத்தில் போர்க்களம்
- ★ துளிர்விடும் நம்பிக்கை (சிறுகதை)
- ★ உலக உதைபந் தாட்டப்போட்டி
- ★ பனைவளம் பேணுவோம் (கவிதை)
- ★ ஈழத்து புதுக்கவிதை
- ★ தமிழ் இலக்கிய சுவை
- ★ வைத்திய கலாநிதி பதிலளிக்கிருர்
- ★ நிர்வாகத்தில் நிகழ்பவை
- ★ முருங்கையின் மகத்துவம்
- ★ வண்டமிழ் வன்னிலக் காட்சி
- ★ ஞாயிறு மஞ்சரி
- ★ மங்கையர் மஞ்சரி
- ★ மாணவர் மன்றம்
- ★ வாரபலன்

மற்றும்

வழக்கமான அம்சங்கள்

விலை ரூபா 4/-

## தொல்பொருள் திணைக்கள நூற்றுண்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் நூற்ருண்டு விழா ஜூலைமாதம் 7ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதனைத்தொடர்ந்து ஜூலை மாதம் 7ம் திகதியிலிருந்து14ம் திகதிவரை ஒரு கிழமைக்கு கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேசமண்டபத்தில் தொல்பொருள் கருத்தரங்குகள் நடைபெறவிருக்கின்றன.

உள்நாட்டு வெளிநாட்டு தொல்பொருளியல் அறிஞர்கள் இக்கருத்தரங்கில் கட்டுரைகளை சமர்ப்பிப்பார்கள். யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, வரலாற்றுத்துறைத் தலைவர் திரு. சி. க. சிற்றம்பலம் ஆகியோர் மேற்படி கருத்தரங்கில் பங்குபற்றி ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பார்கள். (153)

## பாலர் பாடசாலைக் கல்வி அத்திவாரமாக அமையும்

(சித்தன்கேணி)

"ஒரு கிராமத்துக்கு ஆலயம் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல பாலர் பாடசாலையும், நூல்நிலையமும் முக்கியமானது. கல்வியில் பாலர் கல்விதான் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. பாலர் பாடசாலையில் கற்பிக்கப்படும் கல்வியே அத்திவாரமாக அமைகின்றது.

இவ்வாறு அறவழிபோராட்டக்குழுவினரின் தலைவர் திரு. க. கோபாலகிருஸ்ணன் கலைநகர் நேருஜி சிறுவர் நூலகத்தை அண்மையில் திறந்து வைத்து உரையாற்றுகையில கூறினுர்:

அதிபர் திரு. கா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த சிறுவர் நூல் நிலையத்திறப்பு விழாவை அறவழி போராட்டக் குழுவின் தலைவர் திரு. க. கோபாலகிருஸ்ணன் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

திரு. க. கோபாலகிருஷ்ணன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது எமது நிறுவனம் யாழ்ப்பாணம், மன்னுர், கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்தும் சுமார் 75 பாலர் பாடசாலைகளை நடாத்தி வருகின்றது. இதுவரை சுமார் 300 ஆசிரியைகளுக்கு பயிற்சி அளித்திருக்கின்ருேம். எமது நிறுவனம் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு அளிக்கும் பயிற்சியை வடமாநிலக்கல்வித்திணைக்களம் ஏற்றுக் கொண்டுள்ளதுடன் தொடர்ந்து நடாத்துமாறு கேட்டுள்ளது. இதனுல் எமது பாலர் பாடசாலை ஆசிரியர்களைத் தவிர்ந்த ஏனைய பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கும் பயிற்சியை அளித்துள்ளோம். சிறுவர்களுக்கு நூல் நிலையமும் அவசியமானது. நூல்களை படிப்பதன் மூலமே அவர்களின் அறிவு வளர்ச்சி அடைகின்றது. இதனையுணர்ந்தே சிறுவர் நூல்நிலையங்களை ஆரம்பித்து வருகின்ருேம். இதுவரை ஆறு சிறுவர் நூல்நிலையங்களை ஆரம்பித்துள்ளோம். இந்த ஆண்டு அறவழி பாலர் பாடசாலைகள் நடாத்தி வரும் கிராமங்களில் முதியோர் கல்வித்திட்டத்தை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம்.

அறவழி போராட்டக் குழுவினர் சுமார் 2,000 ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்பு செய்தனர்.


அறவழி போராட்டக்குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ், திரு. வே. கந்தசாமி, சட்டத்தரணி மு. கதிர்காமநாதன் கிராமசேவை அலுவலர் வி. ரி. கதிர்காமநாதன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினுர்கள். (137)

## சிற்றூர் அவை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டுவருகிறது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் இப்பகுதியைச் சேர்ந்த சிற்றூர் அவை பிரதிநிதிகள் பங்கு கொண்டனர். வலிகாமம் பகுதிஅரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் கலந்து கொண்டு இதன் செயற்பாடுகள் குறித்து விளக்கம் அளித்தார். இதுபோன்று மேலும் பல கருத்தரங்குகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (86)



புங்குடுதீவு புனித பிரான்சீஸ் சவேரியார் வருடாந்த உற்சவத்தின்போது அருட் திரு வண. பிதா. ஆபரணம் சிங்கராயர் அடிகளார் நற்செய்தி உரையாற்றுவதையும், பக்தர்கள் புடைசூழ புனிதரின் திருச்சொரூப பவனி இடம்பெறுவதையும் படத்தில் காணலாம். படப்பிடிப்பு: புங்குடுதீவு ஞானம்

# பறவை இனங்களை கொல்வதற்கு தடை

(வேலணை)

மண்டைதீவு அல்லைப்பிட்டி முக்கோணக் கடற்பகுதி 'செல்வம் பறவைகள் சரணாலயம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வீர மரணமடைந்த மண்டைதீவுச் செல்வம் (பகீன்) ஞாபகார்த்தமாக இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் இனிமேல் பறவை இனங்களை உயிருடன் பிடிக்கவோ, துப்பாக்கியால் சுட்டுக்கொல்லவோ கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிப்பி, ஊரி மண் ஆகியவற்றை ஏற்றுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு விதிக்கப்பட்ட தடைகளை மீறுவோர்கள் கடும் தண்டனைகளுக்குள்ளாவார்கள் என்றும், இப்பகுதியைக் கண்காணிப்பதற்கு மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதிச் சிற்றூர் அவை உறுப்பினர்களுக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. (75)

# நிவாரணம் கிடைக்கவில்லை என்று புகார்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள ஆனைக்கோட்டை காக்கைதீவுக் கிராமத்தில் கடந்த காலங்களில் நடைபெற்ற வன்செயல்களின்போது பொருளாதார ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 21கடற்றொழிலாளர் குடும்பங்களுக்குச் சுயதொழில் நன்கொடை முயற்சி இன்னமும் கிடைக்கவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி 21 கடற்றொழிலாளர் குடும்பங்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுச் செயலாளருக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைத்த அவசரக் கடிதமொன்றில் தங்கள் பரிதாபகரமான நிலைமையை விளக்கி நிவாரணம் வழங்குமாறு உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காக்கைதீவு மாதிரிக் கிராம வீடமைப்பு அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [153]

## மாவீரர் நினைவு மண்டபம்

(நாவற்குழி)

கொடிகாமத்தில் அமைக்கப்படும் மாவீரர் நினைவு மண்டப நிதிக்காக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கைதடி சிற்றூரவையினர் நாடக விழா ஒன்றை நடத்தவிருக்கிறார்கள்.

இம்மாதம் 30ம் திகதி நவீல்ட் பாடசாலை அரங்கில் நடக்கும் இவ் விழாவில் ''இந்த மக்களும் அந்த நாட்களும்'' ''ஒரு கிளி புலியானது'' ஆகிய நாடகங்களும், ராஜன் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (107)

# தொழில் நுட்பக் கல்லூரி சஞ்சிகை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் ''நுண் தொழில் இளைஞன்'' சஞ்சிகை வெளியீட்டு விழா கல்லூரி மண்டபத்தில் இம் மாதம் 10ம் தேதி ஞாயிறு முற்பகல் 9 மணிக்கு நடைபெறும். கல்லூரி அதிபர் திரு. சி. இராஜேந்திரா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக தொழில்நுட்ப கல்வி பணிப்பாளர் திரு. டபிள்யூ. சமரசிங்க கலந்துகொண்டு மலரை வெளியிட்டு வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன், தொழில்நுட்ப கல்வி மேலதிக பணிப்பாளர் திரு. ஏ. ரி. தர்மபிரிய ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

சஞ்சிகைத்குழுத் தலைவர் திரு. செ. ஞானசேகரம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

தொழில் நுட்பக் கல்லூரி உப அதிபர் திரு. க. ஜெயரட்ணம், கல்லூரி அதிபர் திரு. சி. இராஜேந்திரா ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

தொழில்நுட்ப கல்வி மேலதிக பணிப்பாளர் திரு. ஏ. ரி. தர்மபிரியா, யாழ். மேலதிக அரச அதிபர் திரு.கே. சண்முகநாதன் சிறப்புரை வழங்குவார்கள்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். பிரதம மலர் ஆலோகர் திரு.டபிள்யூ ஜே. சூசைரட்ணம் நன்றியுரை வழங்குவார்.

# 'இபாட்' பிரதிநிதி பனைவள அபிவிருத்தி வேலைகளை நேரில் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச விவாசய அபிவிருத்திக்கான நிதி நிறுவன (இபாட்) இலங்கைப் பிரதிநிதி திரு. ஜெரமி வோல் பனைவள அபிவிருத்தி, பயன்பாடுகள் பற்றி நேரில் பார்வையிடும் முகமாக யாழ். மாவட்டத்துக்கு விஜயம்செய்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் இவ் விஜயத்தை மேற்கொண்டுள்ள திரு.ஜெரமி வோலுடன் இலங்கைப் பனை அபிவிருத்திச்சபை- ஐ. நா. அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் திரு. ரி. திருலிங்கநாதனும் வருகை தந்துள்ளார்.

திரு.ஜெரமி தலைமையிலான குழு சுன்னாகத்திலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் றொபி, பாம்போஷா உற்பத்தித் தொழிற்சாலையைப் பார்வையிட்டது. பாரிய இயந்திரங்களின் உதவியுடன் இயங்கும் இத்தொழிற் சாலையின் உற்பத்திகள்பற்றிப் பரிசோதனை உத்தியோகத்தர் திருமதி ஜீ. எம். யோகநாதன் விளக்கினார்.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பல லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள கைதடி பனைவள ஆராய்ச்சி நிலயத்தையும் அவர் பார்வையிட்டார். திரு. ஜெரமியுடன் ஆலோசகர் திரு. ரி. திருலிங்கநாதன், பனை அபிவிருத்திச் சபைப் பொதுமுகாமையாளர் திரு. ஆர். குகநேசன், விரிவாக்க உத்தியோகத்தர் திரு. சி. மகேந்திரன், உள்ளகக் கணக்காய்வாளர் திரு. எஸ். ஜே. ஜெயக்குமார், பொது சனத் தொடர்பு உத்தியோகத்தர் திரு.வீ.ஜி. தங்கவேல், பரிசோதனை உத்தியோகத்தர் திருமதி ஜீ. எம். யோகநாதன் ஆகியோர் கொண்ட குழு சென்றிருந்தது.

கைதடி பனைவள ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வுகூட அவசியம் பற்றியும், தற்போதைய செயற்பாடுகள்பற்றியும் உற்பத்தி உத்தியோகத்தர் திரு, கே.சிவகணேசன் திரு. ஜெரமி போலுக்கு எடுத்துக்கூறினார். பனை அபிவிருத்திச் சபையும், தொழில் பயிலுநர் சபையும் இணைந்து இவ்வாராய்ச்சி நிலையத்தில் நடத்தும் பனங்கைப்பணி, நார் உற்பத்திப் பொருட்களைப் பார்வையிட்டு மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டார்.

கைதடி பனைவள ஆய்வு நிலையத்திலுள்ள பனம் பான உற்பத்தித் தொழிலகத்தையும் அவர் பார்வையிட்டார்.

திரு.ஜெரமி தலைமையிலான இக்குழு சரசாலையிலுள்ள சாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக் கிராம மக்கள் கம்பெனியைப் பார்வையிட்டது. இக்கம்பெனியின் பனந்தும்பு உற்பத்தித் தொழிற்சாலையில் தும்பு உற்பத்தியையும், அவை சுத்திகரிக்கும் முறையையும் பார்வையிட்டார். சுமார் முப்பது பெண்கள் பனந்தும்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர்.

இங்கு பனஞ்சீனி உற்பத்தி இயந்திரத்தை இயக்கியும், வெல்ல உற்பத்தியையும் பார்வையிட்டதுடன், இம்மக்கள் கம்பெனியினால் உற்பத்தி செய்யப்பட்ட பனங்கற்கண்டு (கல்லாக்காரம்), வெல்லம் ஆகியவற்றைச் சுவைத்து மகிழ்ந்தார்.

ஏற்றுமதி உற்பத்திக் கிராம மக்கள் கம்பெனி முகாமையாளர் திருமதி இராஜேஸ்வரி துரைச்சாமி இந்நிறுவனத்தின் உற்பத்தித் துறைகள்பற்றியும், நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றியும் திரு. ஜெரமி வோலிடம் விளக்கினார். உற்பத்தித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரம்பற்றியும் அவர் கேட்டறிந்துகொண்டதுடன், இம்மக்கள் கம்பெனி சிறப்பாக இயங்கிவருவதற்குப் பாராட்டுத் தெரிவித்துக் கொண்டார்.

திரு. ஜெரமியின் விஜயத்தின்போது விடுதலைப் புலிகளின் இணைப்பு உத்தியோகத்தர் திரு. எஸ் சிவபாலாவும் சமுகமளித்திருந்தார். (54)

## அதிசயக் குழந்தை

(யாழ்ப்பாணம்)

அரைகுறை அமைப்புக் கொண்ட தலையுடன் பிறந்த பெண் குழந்தையொன்று யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் பிறந்த இக் குழந்தைக்கு நாசியுடன் சேர்ந்த வாயும், அதன் இரு பக்கங்களிலும் கண்போன்ற அமைப்புடைய பார்வைற்ற இரு அடையாளங்களும் காணப்படுகின்றன.

இரு கைகளையும் உட்புறம் வளைத்து கால்களையும் கொண்ட இக்குழந்தை கைகால்களை அசைத்து திடகாத்திரமாகக் காணப்படுகிறது. (56)

## பொங்கல் திருவிழா

(மருதங்கேணி)

பச்சிலைப்பள்ளி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் திருவிழாவும், திருக்குளிர்ச்சியும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அடியார்களின் போக்குவரத்தினை முன்னிட்டு விசேட பஸ்சேவைகளை நடத்தும்படி யாழ்., பருத்தித்துறை, கிளிநொச்சி டிப்போக்களைகோயில் பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சாரணர் குழுவினர். திருவிழாவின் போது தொண்டர் சேவையில் ஈடுபடுவார்கள். (53)

## பாலைவனமாகும் ஆபத்து

(யாழ்ப்பாணம்)

''காடுகள் அழிக்கப்படுவதன் மூலம் மழைவீழ்ச்சி குன்றி, நிலத்தின் வளங்கள் குறைக்கப்படுவது மாத்திரமன்றி இலங்கை எதிர்காலத்தில் பாலைவனமாகக் கூடிய ஆபத்தும் உண்டு''

இவ்வாறுயாழ். இராமநாதன் முறைசாரக் கல்வி விவசாய விஞ்ஞான மாணவர்களுக்கான கருத்தரங்கொன்றில் உரையாற்றிய வவுனியா வன பரிபாலன அதிகாரி திரு. என். சி. ஆனந்தராசா குறிப்பிட்டார்.

செல்வன் ரமேஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருந்தரங்கில் அவர் மேலும் உரையாற்றுகையில்; ''இன்று பல்வேறு தேவைகளுக்காக காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. இவை உடன் நிறுத்தப்படுவது மாத்திரமன்றி புதிய மரங்கள் நாட்டப்பட்டு எமது காட்டுவளம் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கு அனைவரும் தமது பூரண ஒத்துழைப்பைத்தர வேண்டும்.

வட்டார விஞ்ஞான கல்வி அதிகாரி திரு. வி. சுந்தரலிங்கம் உட்பட பலர் இக்கருத்தரங்கில் உரைாற்றினர். (க)

## பின்தங்கிய நிலையில் பாடசாலை

(நாவற்குழி)

''பின்தங்கிய நிலையில் உள்ள எமது போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், நாளாந்த அடிப்படைத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாத கேவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். மிகவும் முக்கியமானது மலசலகூடமாகும். பாடசாலை ஆவணங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு ஒரு பாதுகாப்பான இடம் இல்லை.'' என்று போக்கட்டி அ. த. க. பாடசாலை அதிபர் பாடசாலைப் பரிசளிப்பு விழாவில் தலைமை தாங்கிப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கொடிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ராகுலன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில்; இப்பகுதி வறிய மாணவர்களின் வளர்ச்சிக்கு தம்மாலான சிறிய பங்களிப்பைத் தருவதாக உறுதியளித்தார். (107)

## ராசி பலன்

08 - 06 - 1990
வெள்ளிக்கிழமை

மேடம்: காரிய தாமதம், வைராக்கியம், நல்லுறவு.

இடபம்: காரியக்கேடு, உறவு, அன்னியர் உதவி.

மிதுனம்: சுகவாழ்வு, உற்சாகம், பணவரவு.

கடகம்: தூரத்துச்செய்தி, காரியத்தடை, இனசனவரவு.

சிங்கம்: தனசிந்தை, நற்போதனை, மனச்சோர்வு.

கன்னி: வைத்தியம், அற்பர் உதவி, ஆடம்பரம்.

துலாம்: தேகபீடை, தூரத்துச் செய்தி, ஏமாற்றம்.

விருச்சிகம்: தேகபீடை, ஏமாற்றம், உற்சாகம்.

தனுசு: பொய் பேசுதல், கற்பனை, தொந்தரவு.

மகரம்: காரிய தாமதம், வீண்விரயம், நட்பு.

கும்பம்: புதிய உறவு, அன்னியர் உதவி, மனச்சோர்வு.

மீனம்: காரியத்தாமதம், உற்சாகம், கௌரவம்.

இ.மகாதேவா

# பயிலுநர் ஆசிரியருக்கு சம்பளம் கிடைத்தது!

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நியமனம்பெற்ற பயிலுநர் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த மார்ச் மாதம் பதினாறும் திகதி முதல் பாடசாலைகளில் நியமனம் பெற்றுக் கடமையாற்றிவருகின்றார்கள். இவர்களுக்கான சம்பளம் விசேட சம்பளப் பத்திரம்மூலம் வழங்கப்பட்டுள்ளது. (53)

## உதைபந்தாட்ட ரசிகர்களை கவர்ந்திழுக்கும்

# உலகக் கிண்ணப்போட்டி இன்று ஆரம்பமாகிறது

வரலாற்றுப் புகழ்மிக்க ரோமாபுரி நகரமே விழாக் கோலம் பூண்டு காட்சியளிக்கின்றது.

லட்சக்கணக்கான ரசிகர்கள் நகரில் வந்து இறங்கிய வண்ணம் இருக்கின்றார்கள். உலகின் பல்வேறுபட்ட நாட்டுத் தலைவர்களையும், எண்ணிறந்த விற்பன்னர்களையும், கடந்த காலங்களின் முடிமன்

(13)

னர்களையும்கூடக் கவர்ந்த உன்னதமான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி இன்று கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

இத்தாலி 'மிலான்' நகரின் விளையாட்டுச் சதுக்கத்தில் ஆரம்ப விழா நிகழ்ச்சிகள் நடைபெற்று முடிவடைந்ததும், முதற் போட்டியில் தற்போதைய சாம்பியனான ஆர்ஜன்ரீனாவும் - கமரூனும் மோதுகின்றன.

உலகப் போட்டியில் பங்குபற்றும் மற்றைய நாடுகளின் விபரம்:-

### கமரூன்

கமரூன் உதைபந்தாட்டச் சங்கம் 1962ம் ஆண்டு உதயமானது. 1982ம் ஆண்டு உலகக் கிண்ணப்போட்டியில் விளையாடத் தெரிவான ஒரே ஒரு ஆபிரிக்க நாடு கமரூனாகும்.

இவர்கள் இதுவரை மூன்று உலக முதற்தர ஆட்டங்களில் கலந்துகொண்டு எப்போட்டிகளிலும் வெற்றி - தோல்வியின்றி ஆட்டங்களை முடித்து 3 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

### செக்கோஸ்லவேக்கியா

செக்கோஸ்லவேக்கியா உதைபந்தாட்டச் சங்கம் 1906ம் ஆண்டு உதயமானது. 1934—1962ம் ஆண்டுகளின் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் 2ம் இடத்தைப் பெற்றது. 1938, 1654, 1958, 1970, 1982ம் ஆண்டுகளின் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடத் தெரிவானது.

இதுவரை இக்கோஷ்டி 25 உலக முதற்தரப் போட்டிகளில் பங்குபற்றி 8 போட்டிகளில் வெற்றியும், 12 போட்டிகளில் தோல்வியும், 5 போட்டிகளைச் சமனாக்கி 21புள்ளிகளைப் பெற்றுள்ளது.

### கோஸ்டாரிக்கா

கோஸ்டாரிக்கா உதைபந்தாட்டச் சங்கம் 1921ம்ஆண்டு உதயமானது. வடமத்திய அமெரிக்க நாடான இது, இம்முறைதான் முதற் தடவையாக உலகக் கிண்ணப்போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்கா

அமெரிக்க உதைபந்தாட்டச் சங்கம் 1913ம் ஆண்டு உதயமானது. 1930ம் ஆண்டு முதலாவது உலகக் கிண்ணப் போட்டியில் அரை இறுதிப் போட்டிவரை விளையாடியது. 1934—1950ம் ஆண்டுகளின் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடத் தகுதிபெற்றது.

அமெரிக்கா இதுவரை ஏழு உலக முதற்தர ஆட்டங்களில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றியும், 4 போட்டிகளில் தோல்வியுமடைந்து 6 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

### கொலம்பியா

கொலம்பியா உதைபந்தாட்டச் சங்கம் 1931ம் ஆண்டு உதயமானது. 1962ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் மட்டுமே முதற் தடவையாக விளையாடத் தகுதி பெற்றது. இக்கோஷ்டி இதுவரை ஏழு உலக முதற்தரப் போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றியும், 4 போட்டிகளில் தோல்வியுமடைந்து, 6 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

### ஐக்கிய அரபுக் குடியரசு

ஐக்கிய அரபுக் குடியரசு உதைபந்தாட்டச் சங்கம் 1971ம் ஆண்டு உதயமானது. இம்முறை உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கு ஆசிய நாட்டிலிருந்து தெரிவான 2வது நாடு ஐக்கிய அரபுக் குடியரசு என்பது குறிப்பிடத்தக்கது.




### உலகக் கிண்ண நாளைய ஆட்டம்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் நாளைய (ஜூன் 9ம் திகதி) ஆட்டங்களின் விபரம்:—

'ஏ' பிரிவு:- இத்தாலி எதிர் ஆஸ்ரீயா.

'பி' பிரிவு:- ரஷ்யா எதிர் றுமேனியா.

'டி' பிரிவு:- கொலம்பியா எதிர் ஐக்கிய அரபுக் குடியரசு.

### தென் கொரியா

தென் கொரியா உதைபந்தாட்டச் சங்கம் 1928ம்ஆண்டு உதயமானது. 1954—1986ம் ஆண்டுகளின் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடத் தெரிவானது. இம்முறை உலகக் கிண்ணப் போட்டிக்கு ஆசியாவிலிருந்து தெரிவான முதலாவது நாடு கொரியாவாகும் இக்கோஷ்டி இதுவரை ஐந்து உலக முதற்தரப் போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் தோல்வியடைந்து, 1 போட்டியைச் சமனாக்கி, ஒரு புள்ளியைமட்டுமே பெற்றுள்ளது.

நமது விளையாட்டு நிருபர்
'தேவா'

### எகிப்து

எகிப்தின் உதைபந்தாட்டச் சங்கம் 1923ம் ஆண்டு உதயமானது. 1934ம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து தெரிவான ஒரே நாடு எகிப்தாகும். அதன் பின்பு இம்முறையே 2வது தடவையாக உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடத் தெரிவாகியுள்ளது.

---

## பூங்காவனத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் பூங்காவனத் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அளவையூர் சிதம்பரநாதன் கொஷ்டியினரதும், குமரகுரு கொஷ்டியினரதும் மேளக்கச்சேரியும் யாழ். நகர் வின்ரேமகேந்திராவின் "பாடு நிலாவே" இசையமுதம் நிகழ்ச்சியும், அருணா கோஷ்டியின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது.

## இரு கூட்டுறவு சங்கங்களுக்கு பெயர் மாற்றம்!

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் இயங்கிவந்த இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட சங்கங்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வவுனியா தெற்கு சிங்களப் பிரிவுப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கமாக இயங்கிவந்த இச் சங்கம் வவுனியா தெற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) என்றும் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கமாக இயங்கிவந்த இச் சங்கம் வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இப் பெயர் மாற்றம் கடந்த மாதம் 5-ம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது.

## கிளிநொச்சியில் பல்கலைக்கழக காணியில் வசிப்போருக்கு மாற்றிடம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியில் குடியேறி இருந்துவரும் 21 காணிக் குடியிருப்பாளர்களுக்கு நிவாரணப் பணமும் மாற்றுக்காணியும் வழங்குவதற்கு கிளிநொச்சி கச்சேரியில் மாநாடொன்றில் முடிவுசெய்யப்பட்டது.

இம்மகாநாட்டிற்கு அரச அதிபர் க. மாணிக்கவாசகர் தலைமைதாங்கினார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. பரமமூர்த்தி, மகளிர் மாவட்டப் பொறுப்பாளர் செல்வி பிரபா, முன்னணியின் அரச கூட்டுத்தாபன இணைப்பாளர் திரு. எம். ஜி. சிவபாதம், மேலதிக அரச அதிபர் திரு. குணராசா, உதவி அரச அதிபர் எஸ். வேலுப்பிள்ளை ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

பிரஸ்தாப விவசாய பீடம் அமைந்துள்ள காணியில் குடியிருப்போருக்கு மாற்று காணியும், நிவாரணப் பண உதவிகளும் வீடமைப்பும் வளங்குவதென முடிவானது. (83)

## தொலைக்கல்வி பயிற்சி

(நாவற்குழி)

1989—91 கற்கை ஆண்டிற்கான தொலைக்கல்விப் பயிற்சி ஆசிரியர்களுக்கான செய்முறை வகுப்புகள் நாளையும் நாளை மறுதினமும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். (107)

## நாளை சனிக்கிழமை உற்பத்தித்திறன் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியாழ்ப்பாண ஆஸ்பத்திரிவீதிக் கிளையில் உற்பத்திதிறன் கொடுப்பனவு கீழ்க்குறிப்பிட்ட கிராமசேவகர் பிரிவுகளுக்கு நாளை சனிக்கிழமை வழங்கப்படும்.

கிராமசேவகர் பிரிவுகள் மாதகல், பண்டத்தரிப்பு, மாசியப்பிட்டி, சங்கானை, சுதுமலை.

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நவாலி வடக்கு இளைஞர் சனசமூக நிலைய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் செல்வன் சி. தட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ப. செகராஜசேகரன், செயலாளர்: செ, ரமேஷ், பொருளாளர்: பி, சுரேந்திரகுமார், போஷகர்கள்: சு. குலசேகரம், ஒச. வரதராசா. (க)

## தமிழ்மொழி வளர்ச்சிக்கு மொழி ஆய்வுகூடம் அவசியம்

(யாழ்ப்பாணம்)

''நவீன தொழில் நுட்பங்களுடன் ஒரு மொழி ஆய்வுகூடம் நிறுவி தமிழ்மொழி வளர்ச்சிக்கான வழி வகைகளைக் கையாளவேண்டும்.''

இவ்வாறு கல்வி அதிகாரி எஸ். வி. மகேசவேலு யாழ்ப்பாணம் வைத்திதீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் குறிப்பிட்டார்.

விழாவுக்கு எழுத்தாளர் சொக்கன் தலைமைவகித்தார். திரு. மகேசவேலு மேலும் கூறியதாவது: மொழியறிவு இல்லாவிட்டால் எந்தப் பாடத்திலேயும் விஞ்ஞானம் உட்பட கற்பிப்பதில் சிரமம் ஏற்படுகின்றது. அத்தோடு தமிழ்மொழி அறிவு மிக மிகக் குன்றி விட்டது.

மேலை நாடுகளில் வளர்ந்து வரும் விஞ்ஞானத்தை எமது மொழியில் மொழிபெயர்ப்பதில் காலம் எடுக்கிறது. இதற்காகத்தான் மொழி ஆய்வுகூடங்களை ஏற்படுத்தி மொழிபெயர்ப்புக்களை விரிவு படுத்த வேண்டும்.

பிறமொழி வளர்ச்சியால் எமது மொழி வளர்கிறது. ஒவ்வொருவருக்கும் மூன்று மொழிகள் கற்பிக்கவேண்டும். ஒன்று தாய் மொழி. மற்றயது ஆங்கிலம், ஏதாவது இன்னொரு மொழி என்றார்.

சவியரங்கில் கம்பனைப் பற்றி சோ. பத்மநாதனும், வள்ளுவரைப் பற்றி ச.வே. பஞ்சாட்சரமும், இளங்கோவைப்பற்றி கவிஞர் காரை சுந்தரம்பிள்ளையும், பாரதி பற்றி கவிஞர் பா. சத்தியசீலனும் கவிதைகள் பாடினார்கள்.

சீதனப்பிரச்சனைபற்றி பட்டிமன்றத்தில் பாடசாலை மாணவர்கள் சாதக பாதகமாக கருத்துக்களை வழங்கினார்கள்.

''இஸ்லாம் தந்த தமிழ்'' என்ற தலைப்பின் கீழ் ஜனாப் எம். எஸ். அப்துல் ரஹீம், ''கிறிஸ்தவம் தந்த தமிழ்'' என்ற தலைப்பில் வண. நீ. மரிய சேவியரும் உரையாற்றினார்கள். (152)

## சட்டவிரோத வேளாண்மையால் வயல்களுக்கு நீரின்றி விவசாயிகள் பாதிப்பு!

(கிளிநொச்சி)

இரணைமடுத் திட்டத்தின் கீழ் 500 ஏக்கருக்கு மேல் அடாத்தாக சிறுபோக வேளாண்மை மேற்கொள்ளப் படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டவிரோத வேளாண்மையால் நீர்ப்பாசன சட்டதிட்டங்களுக்கு அமைய வேளாண்மை மேற்கொள்ளும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தமது வயல்களுக்கு போதியளவு நீர் கிடைக்காமல் பெரும்பாதிப்படைந்து தமது ஆட்சேபனையை முரசுமோட்டை இரணமடு திட்ட உபகுழு தலைவர் மு. கந்தசாமி தலைமையில் நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்டவர்களுக்கு முறையிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க சிறுபோக வேளாண்மை தொடர்பாக கிளிநொச்சி நீர்ப்பாசன பொறியியலாளர் என். ஜே. நவரத்தினராசா விடுத்துள்ள செய்தியில் அங்கீகரிக்கப்பட்ட விஸ்த்தீரணத்திற்கு மேல் மேலதிக சிறுபோக வேளாண்மை மேற்கொள்வது குற்றமாகும். அத்துடன் வாய்க்கால்கள் வடிகால்களுக்கு ஒதுக்கப்பட்ட காணியில் விவசாயம் செய்வதும் குற்றமாகும். நீர்வாய்க்கால் காணியில் இருந்து அடாத்தாக காடுகளை வெட்டியோ நீர் இறைக்கும் இயந்திரங்களை கொண்டோ நீர் எடுப்பதும் சட்ட விரோதமானதாகும். இவைகளை மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கப்படும்.

இதே வேளை இரணைமடுத் திட்ட முகாமையாளர் வ. கதிரவேலு இரணைமடுக் குளத்தில் 4599 ஏக்கருக்கு மாத்திரம் நீர் சிறுபோகத்திற்கு வழங்கக் கூடியதாக உள்ளதால் அத்துமீறி சிறுபோக வேளாண்மையை மேற்கொள்வதை தடைசெய்யுமாறு இரணமடுத்திட்ட உப குழுக்களை கோரியுள்ளதுடன் கண்டனத்தையும் தெரிவித்துள்ளார். (83)

## மாணவர்கள்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சாரம் செய்தார்'' என்றார்.

மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ரஞ்சன் பேசுகையில்: வெற்றி தோல்வியை வைத்து ஒருவரும் மனதைச் சோரவிடக்கூடாது. இது மாதிரியான பல போட்டிகளில் நீங்கள் மீண்டும் பங்குபற்றி உங்கள் அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (107)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆறு பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்தவர்களில் ஆறு பேர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்விபத்துக்களில் ஆனைக்கோட்டையில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் ஆனைக்கோட்டையைச்சேர்ந்த மரியதாஸ் அமலதாஸ் என்ற 6 வயதுச் சிறுவன் படுகாயம் அடைந்தார்.

சாவகச்சேரியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மீசாலையைச்சேர்ந்த எஸ். பரமநாதன் (வயது 30) என்பவர்படுகாயமடைந்தார். அங்கு இடம்பெற்ற மற்றொரு விபத்தில் மீசாலை தெற்கைச் சேர்ந்த கே. பரமேஸ்வரி (வயது 54) என்ற பெண் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த நடராசா உமாகாந்தன் (வயது 20) என்பவர் படுகாயமடைந்தார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் நல்லூரைச் சேர்ந்த திருமதி எம். ஜெயசிங்கம் (வயது 67) என்ற வயோதிபப்பெண் படுகாயமடைந்தார். (56)

## இன்று தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை–மேற்கு ஸ்ரீவிநாயகமூர்த்திப் பிள்ளையார் ஆலய தீர்த்தோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

தீர்த்தோற்சவத்தையொட்டி இந்து இளைஞர் மன்றத்தினுல் அன்னதானம் வழங்கப்படும்.

## அங்குரார்ப்பணம்

(யாழ்பாணம்)

யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவு நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்

மேற்படி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பண்டத்தரிப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன், யாழ். கல்வித் திணைக்களத் தொழில்நுட்பக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

விழாவிற்கு அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமை தாங்குவார்.

## விண்ணப்பப் பத்திரங்கள் விநியோகம்

(சித்தன்கேணி)

பதினைந்துலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினரால் வழங்கப்படவுள்ள வீடமைப்புக்கடன் விண்ணப்பப்பத்திரங்கள் எதிர்வரும் 18ம் திகதி சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் விநியோகிக்கப்படவுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு இப்பிரிவில் சுமார் இரண்டாயிரம் விண்ணப்பப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (137)

## வருடாந்த உற்சவம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் புனித. அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவ ஆராதனைகள் நடைபெற்று எதிர்வரும் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5-45 மணிக்கு யாழ். ஆயர் அதி வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையினுல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து காலை 7-15 மணிக்கு திருச்சுருப பவனி இடம்பெறவுள்ளது. உற்சவ நாட்களில் மறை உரைகளை அருட் திரு. லெம்பேட் அடிகளார் நிகழ்த்துவார்.

இந்த உற்சவத்தைச் சிறப்பாக நடாத்துவதற்கானஒழுங்குகளை ஆலய பரிபாலகர் அருட் திரு. அன்ரன் இராசநாயகம் அடிகளார் செய்துள்ளார். [72]

## பயிலுநர் ஆசிரியர் சங்கம்

(மட்டுவில்)

தென்மராட்சி பயிலுநர் ஆசிரியர் சங்கம் ஒன்று சாவகச்சேரியில் அமைக்கப்பட்டுள்ளது.

பயிலுனர் ஆசிரியர்களை உறுப்பினராகக் கொண்ட இச் சங்கத்தினர் தலைவராக ஆசிரியர் திரு. நடராஜாவும் செயலாளராக ஆசிரியர் த. குகநேசனும், பொருளாளராக ஆசிரியை செல்வி வ. கமலேஸ்வரியும் தெரிவு செய்யப்பட்டனர். (82)

## சைவசமயப் பரீட்சை

(நாவற்குழி)

சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்படவிருக்கும் 90ம் ஆண்டிற்கான அகில இலங்கை சைவசமயப் பாடப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான முடிவு திகதி இம்மாதம் 30ம் திகதியாகும். (107)

# பெருந்தெருக்கள் பற்றியகருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் யாழ். நிலையத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்ட பெருந்தெருக்கள் பற்றிய கருத்தரங்கு நாளை சனிக்கிழமை யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற இருக்கிறது.

இக்கருத்தரங்கில் திருவாளர்கள் என். செல்வரத்தினம், எம். மரியதாசன், எஸ். பாலேந்திரா, சம்புநாதன், எம். தில்லைநாதன் ஆகிய பொறியியலாளர்கள் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பார்கள்.

இதனைத்தொடர்ந்து அவை பற்றிய கருத்து ஆய்வும் இடம்பெறவிருக்கிறது. (153)

## இறையியல் கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

பொது நிலையினருக்கான இறையியல் கற்கைநெறி யாழ் திருமறைப்பணி நிலையத்தில் நாளை சனிக்கிழமை காலை யாழ். ஆயர் அதி வண. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் ஆரம்பித்து வைக்கப்படும். (153)

## விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கில் விபத்தில் படுகாயமஸடந்த வயோதிபப் பெண் ஒருவர் நினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கையில் நேற்று மரணமானுர்.

கடந்த 5-ம் திகதி வேலணை துறையூரில் இடம்பெற்ற இவ்விபத்தில் துறையூரைச் சேர்ந்த இரத்தினம் தம்பிப்பிள்ளை (வயது 60) என்ற வயோதிபப் பெண்ணே மரணமானவராவார்.

இதற்கான மரணவிசாரணையை பதில் நீதிபதி ஏ. அன்ரனி மேற்கொண்டார். (56)

## க. பொ. த.

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

மேற்படி பரீட்சைக்கு இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் தோற்றியிருந்தார்கள்.

பாடசாலை மாணவர்களின் மேற்படி பெறுபேறுகள் பாடசாலை அதிபர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சாத்திகளின் முடிவுகள் அவர்களின் தனிப்பட்ட விலாசங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

# "சனசமூக நிலையம் சிறப்பாகச் செயல்படவேண்டும்"

(காங்கேசன்துறை)

''சனசமூக நிலையங்கள் சிறப்பாக சேவைபுரிந்து மக்களின் தேவைகளை நிறைவேற்ற உதவவேண்டும். ஆனுல் இப்பகுதியில் பல சனசமூக நிலையங்கள் செயல்படாமல் இருப்பதால் அவற்றுக்குரிய நன்கொடைகளையும், நிதியுதவிகளையும் கூட வழங்க முடியாமல் உள்ளது. ஆகவே இந்நிலையங்களை உடனடியாக செயல்பட வைக்க வேண்டும்.''

இவ்வாறு வலி–வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை உப அலுவலக பொறுப்பதிகாரி திரு. த. மகாலிங்கம் இப்பகுதி சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றுகையில் கூறிஞர்.

சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக காங்கேசன்துறை உப அலுவலக மண்டபத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் 19 சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

திரு. மகாலிங்கம் தொடர்ந்து பேசுகையில், 'இப்பகுதியில் உள்ள பல சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளை நாம் அறிய முடியாமல் உள்ளது. சனசமூக நிலையங்கள் கூட்டங்களை நடத்தி பிரதேச சபைகளுக்கும், உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அறிக்கைகளை அனுப்பிவைக்க வேண்டும்' என்றுர்.

வலி. வடக்கு பிரதேச சபை சனசமூக நிலைய உத்தியோகத்தர் திருமதி ஜெயமனேகரன் பேசுகையில், சனசமூக நிலையங்கள் பாலர் பாடசாலைகளை ஒழுங்காக செயற்படுத்தி கிராம சிறுர்களின் கல்வி விருத்திக்கு உதவவேண்டும். இப்பாலர் பாடசாலைகளை கல்விப்பகுதியினர் பொறுப்பேற்று உதவி செய்யக்கூடிய வசதிகள் ஏற்படலாம் என கருதப்படுகிறது. அத்துடன் சனசமூக நிலையங்கள் பல்துறைகளிலும் சிறப்பாக பணிபுரிய வேண்டும்'' என்றுர். (86)

## அமைச்சர் ரஞ்சன்

(1ம் பக்கத் தொடர்ச்சி

தப் பத்திரிகை வெளிவரும் என்றும் தற்போது இது ஒரு பக்கத்தை உள்ளடக்கியதாக இருக்கும். அதிகமான செய்திகள் கிடைக்கும்போது பத்திரிகைகளின் பக்கமும் அதிகரிக்கும் என்றும் அவர் கூறிஞர்.

முதலாவது இதழில் ஆசிரியர் தலையங்கம் மாத்திரமே இடம்பெற்றிருக்கிறது.

இந்தப்பத்திரிகை குறித்து பின்வரும் கேள்விகள் அவரிடம் கேட்டபோது அவர் தெரிவித்த பதில்கள் வருமாறு:

கேள்வி: உங்கள் பத்திரிகையின் பெயர் என்ன?

பதில்: அது எனது ''செய்தித்தாள்''.

கேள்வி: இந்தச் செய்தித்தாளை நாம் 'ரஞ்சன் முன்னணி' என அழைக்கலாமா?

பதில்: ஆம். அதை எப்படி வேண்டுமானுலும் அழைக்கலாம்.

# மேஜர் முரளி வெற்றிக்கேடயம் 3-வது சுற்றுப்போட்டிக்கு தெரிவான பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளி ஞாபகார்த்த வெற்றிக்கேடயப் புதிர்ப் போட்டியின் 2வது சுற்றில் வல்வை மகளிர்கல்லூரி கூடுதலான புள்ளிகளைப்பெற்றுள்ளதுடன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிமாணவன் சி. ரகுராம் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

2வது சுற்றில்வெற்றிபெற்று 3வது சுற்றுப் போட்டியில் கலந்து கொள்வதற்குத் தெரிவான பாடசாலை விபரங்கள்:

மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுன்ஞகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம். வல்வை. மகளிர் கல்லூரி, யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி, கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், பளை மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், உரும்பராய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, நயினுதீவு மகாவித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, தெல்லிப்பளை வீமன்காமம் மகாவித்தியாலயம், யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம்.

3–வது சுற்றுப் போட்டி நடைபெறும் இடம், திகதி, நேரம் என்பவை பின்னர் அறிவிக்கப்படும்.

## கடற்றெழிலாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. மு கருணுநிதி கேட்டுள்ளார்.

தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறிஞர்.

## சிகிரியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மாதம் 5-ம் திகதி ராணுவ உடை தரித்த கொள்ளைகோஷ்டி ஒன்று அங்கு இருந்த சுமார் எழுபது உல்லாசப் பிரயாணிகளிடம் பெருந்தொகையான பணத்தையும், பொருள்களையும் கொள்ளையடித்தது தெரிந்ததே.

## வவுனியாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தரப்பில் 'அத்துமீறல்' நடந்ததாகவும் அதனைத் தொடர்ந்து அசம்பாவிதம் தலைதூக்கியதாகவும் தெரியவருகிறது.

கடைகள் இழுத்துமூடப்பட்டதுடன், நகர்ப்பகுதியில் நின்றவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுர்கள்.

நண்பகலுக்குப் பின்னர் வவுனியா வழமைக்குத் திரும்பியது.

## காங்கேசன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லும் ரயில் வண்டிகளிலேயே இதுபோன்ற உணவுகள் விநியோகிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு வரும் ரயிலில் தரமான உணவு வகைகள் இருப்பதாகவும், ஆனுல் அதே ரயில் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும்போது, கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட எஞ்சிய உணவுவகைகளையே மறுநாள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறதாம்.

பல பிரயாணிகள் இவ் உணவு வகைகளை கூடுதலாகப் பணம் கொடுத்து வாங்கியபோதும் உணவில் 'துர்நாற்றம்' வீசுவதைக்கண்டு ரயிலுக்கு வெளியில் வீசிவிட்டு சிற்றுண்டிச்சாலை ஊழியர்களிடம் முறையிடுவதையுப் காணக்கூடியதாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (வி)

## வவுனியா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மல் காவலரண்களை உடைத்துக்கொண்டு இராணுவம் முன்னேற முயன்றபோது அவர்களை நோக்கிப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள். இதேவேளை இராணுவத்தினரும் துப்பாக்கியால் சுட்டார்கள். இரு தரப்பினரிடையேயும் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது.

இந்த நேரடி மோதலின் போது இராணுவத்தினரை புலிகள் சுற்றி வளைத்தனர். புலிகளால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையிலிருந்த இராணுவத்தினர் தமது துப்பாக்கிப் பிரயோகத்தை நிறுத்திக் கொண்டனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் இலங்கைஅரசாங்கத்துடனும், இராணுவத் தலைமைப் பீடத்துடனும் தொடர்புகொண்டு புலிகளின் அனுமதிபெருமல் இராணுவம் வெளியேறக் கூடாது என்ற யுத்தநிறுத்த உடன்பாட்டை இராணுவம் மீறியதை சுட்டிக் காட்டினுர்கள்.

வடக்கு கிழக்கு மாகாண சமாதானக்குழுவின் தலைவரும், அமைச்சருமான ஜனுப் ஏ. ஸி. எஸ். ஹமீத் இந்த விடயத்தில் தலையிட்டு இராணுவத்தினரைப் பின்வாங்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து நண்பகல் பன்னிரண்டு மணியளவில் இராணுவத்தினர் வவுனியா இராணுவ முகாம் நோக்கித் திரும்பினுர்கள்.

காயமடைந்த இராணுவத்தினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குஹெலிகொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். இதில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் இராணுவத்தினரின் தரப்பில் எஸ். காமினி (28 வயது) என்பவரே இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமது வீரர்கள் தரப்பில் காயமோ, உயிர்ச்சேதங்களோ இச்சம்பவத்தில் இடம்பெறவில்லையென்று விடுதலைப்புலிகள் வட்டாரம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.